# கொழும்பில் திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு நீதிமன்றங்கள் தடை




கொழும்பில் மருதானை, கோட்டை உள்ளிட்ட மேலும் சில பகுதிகளில் தியாக தீபம் திலீபனை நினைவுகூரும் நிகழ்வுகளை நடத்துவதற்குக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் இன்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும், மருதானை பிரதேசத்தில் நினைவேந்தலை நடத்துவதற்கு மாளிகா கந்த நீதிவான் நீதிமன்றமும் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கோட்டை மற்றும் மருதானைப் பொலிஸார் நீதிமன்றங்களில் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

'ஒடுக்கப்படும் தமிழ் மக்களோடு நிற்போம்' என்ற கோஷத்துடன் கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கத்தால் இன்று பிற்பகல் 3 மணிக்கு மருதானையில் அமைந்துள்ள சமய, சமூக நடுநிலையத்தில் திலீபன் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஏற்கனவே கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நோக்கிப் பயணித்த தியாகி திலீபனின் நினைவு ஊர்தி மீதும், அந்த ஊர்தியில் பயணித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதும் சர்தாபுர பகுதியில் வைத்து சிலரால் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடும் கண்டனங்களுக்கு உள்ளாகியிருந்தது.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 02 செவ்வாய்க்கிழமை 19.09.2023 கதிர் 75




## புலிப் பயங்கரவாதியே கஜேந்திரன்!

### உடன் சிறையில் அடையுங்கள் என கூக்குரல் இடுகின்றார் விமல் எம்.பி.



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஒரு புலிப் பயங்கரவாதி என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி. குற்றம் சாட்டியுள்ளார்.

கஜேந்திரன் எம்.பியை உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்றும் அவர்

2 ➤

## அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு 75 லட்சம் பணம் கொடுத்து ஏமாந்த யாழ்ப்பாண ஆசிரியர்

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காகப் பணம் செலுத்தி ஏமாற்றமடைந்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதற்கான விளம்பரங்கள் மூலமாக கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுடன் அறிமுகமாகி, கட்டம் கட்டங்களாக 75 லட்சம் ரூபாவை அவர் வங்கியில் வைப்பிலிட்டுள்ளார்.

வங்கியில் பணம் வைப்பிலிட்டு நீண்ட காலமாக ஏமாற்றமடைந்ததால், அவர் யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். அதற்கமைய விசாரணைகளை முன்னெடுத்த யாழ். மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயனின் கீழ் இயங்கும் சிசிர குழுவினர் கொழும்பினைச் சேர்ந்த சந்தேகநபரைக் கைது செய்து, இன்றைய தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது சந்தேநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்தச் சந்தேகநபரால்

2 ➤



## மீண்டும் பாடசாலை சென்ற வைசாலி

மருத்துவத் தவறினால் தனது இடது கையை இழந்த மாணவி மீண்டும் தனது கற்றல் செயற்பாட்டுக்காகப் பாடசாலைக்குச் சென்றுள்ளார்.


பாடசாலை சென்ற மாணவியைச் சக மாணவர்கள் பூங்கொத்து வழங்கி வரவேற்றதுடன், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரும் மாணவியை வரவேற்றனர்.

யாழ்ப்பாணம், மல்லாகம் பகுதியைச் சேர்ந்த சாண்டில்யன் வைசாலி (வயது 8) எனும் சிறுமி யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார்.

கடந்த மாதம் காய்ச்சல் காரணமாக தனியார் மருத்துவமனைக்குச் சிகிச்சைக்குச் சென்ற நிலையில், வைத்தியரின் ஆலோசனைக்கு அமைவாக யாழ். போதனா வைத்தியசாலையில்

2 ➤

## போலி நாணயத்தாளைக் கொடுத்த தருமபுரம் வர்த்தகர் கைதானார்!



தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் பொருள் கொள்வனவு செய்யும்போது வழங்கப்பட்ட பணத்தில் 5000 ரூபாய் போலி நாணயத்தாள் ஒன்று இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்துப் பொலிசாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய, வர்த்தக நிலைய உரிமையாளர் கைது செய்யப்பட்டு இன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதி-மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் போலி நாணயத்தாள்கள் பயன்பாட்டில் இருப்பதாக தமக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் எனவே வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள்

2 ➤

## கிழக்கு ஆளுநரைப் பதவி விலக்குவதற்கு இலட்சம் கையெழுத்துத் திரட்டும் பிக்குகள்!



கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு எதிராக இலட்சம் கையெழுத்துகளைத் திரட்டும் நடவடிக்கை ஐக்கிய சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக இன்று காலை முதல் இந்தக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை - நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த

2 ➤



## உலக வங்கியின் தலைவர் இலங்கைக்கு வருகிறார்!

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் திட்டத்திற்கு முழுமையான ஆதரவை வழங்குவோம் என உலக வங்கி அறிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டங்களை முன்னோக்கிக் கொண்டு சென்றால் இலங்கை எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியும், என உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா கூறியுள்ளார்.

இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல், புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி மற்றும் கல்வித்துறை ஊக்குவிப்புக்கும் ஆதரவு வழங்குவோம் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

ஐ.நா. சபையின் 78 ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதிக்கும் உலக வங்கியின் தலைவர் அஜய் பங்காவுக்கும் இடையில் நேற்று

2 ➤

# முருகானந்தா கல்லூரியில் முன் வீதிக் கடவையில் பொலிஸாரின் பணி மிக மந்தமென குற்றச்சாட்டு



கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியில் சுமார் 550 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

முருகானந்தா ஆரம்பப்பாடசாலையில் 300 க்கும் அதிகமான மாணவர்கள் கற்கின்றனர்.

கற்றல் செயல்பாட்டிற்கு இந்தப் பாடசாலைக்கு பல பகுதிகளிலிருந்தும் பேருந்து, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டிகளில் கற்றல் நடவடிக்கைக்காக பல மாணவர்கள் வருகின்றனர்.

இத்தகைய நிலையில், பாடசாலைக்கு முன்பாக உள்ள வீதிக்கடவையில் காலை வேளையில் மாத் திரமே பொலிசார் வீதிக் கடமைக்கு வருவதாகவும், மதியவேளையில் பாடசாலைக் கற்றல் செயல்பாடுகள் முடிவடையும் நேரத்தில் பொலிசார் வீதிப் பாதுகாப்புக் கடமைக்கு வருவதில்லை எனவும் பெற்றோர்களும் மாணவர்களும் தெரிவிக்கின்றனர்.

முரசுமோட்டை முருகானந்தா கல்லூரிக்கு முன்னா லுள்ளது வீதிவிபத்துக்கள் அதிகம் நடைபெறும் ஏ-35 பிரதான வீதியாகும்.

எனவே, மணவர்களின் நலன் கருதி, பொலிசார் உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும் என அனைவ ரும் வேண்டுகோள் முன்வைத் துள்ளனர். (02)

## மாத்தறையின் பிரபல பாடசாலையிலிருந்து துப்பாக்கியும் தோட்டாக்களும் கண்டெடுப்பு

மாத்தறை வெல்லமட மஹிந்த ராஜபக்ச வித்தியாலயத்தின் பழைய கட்டிடத்தின் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பல வெடிபொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த கட்டிடம் புனரமைக்கப்படும் நிலையில், இந்த வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, வெளிநாட்டுத் தயாரிப்பு என சந்தேகிக்கப்படும் ரீ-56 ரகத் துப்பாக்கி மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் 21 தோட்டாக்கள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வேறு வகையான 136 தோட்டாக்களும், வெடிக்க வைக்கப் பயன்படும் 2 டெட்டோனேட்டர்கள் உள்ளிட்ட பல பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

## உலக வங்கியின் தலைவர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு இடம்பெற்றது.

கடந்த இரண்டு வருடங்களில் இலங்கை எதிர் கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உலக வங்கி வழங்கிய ஆதரவிற்கு ஜனாதிபதி உலக வங்கியின் தலைவருக்கு நன்றி தெரிவித்தார்.

இதேநேரம், இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடுத்த அழைப்பை உலக வங்கியின் தலைவர் ஏற்றுக்கொண்டார்.

மேலும் அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்கும் வேலைத்திட்டத்தில் வெளிப்படைத் தன்மை அவசியம் என்றும் உலக வங்கியின் தலைவர் தெரிவித்தார். (க)

## கிழக்கு ஆளுநரைப் பதவி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கோரி மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக பிக்குகள் கடந்த மாதம் 28 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த விகாரையை நிர்மாணிப்பதால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் குறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகளுக்கு அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரால் விளக்கம் அளிக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை அனைத்து இன மக்களும் வாழும் ஒரு பிரதேசமாகும். பிக்குகளின் செயற்பாடுகள் போன்று ஏனைய இனத்தவரும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பார்களானால் அதற்கு நீங்களே ஒரு முன்னுதாரணமாக ஆகிவிடுவீர்கள், என ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன்போது தெரிவித்திருந்தார்.

பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட தடைக்கடிதத்தை மீளப்பெற்றாலும், பிரதேச சபையின் அனுமதியின்றி எந்த ஒரு கட்டுமானப்பணிகளையும் முன்னெடுக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில், ஆளுநரைப் பதவி விலக்க வேண்டுமென வலியுறுத்தியே இலட்சம் கையெழுத்தைத் திரட்டும் நடவடிக்கையை ஐக்கிய சங்கம் ஆரம்பித்துள்ளது. (க)

## போலி நாணயத்தாளைக் கொடுத்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் மிகுந்த அவதானத்துடன் பணக் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (02)

## தாயகத் தமிழர் மீதான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டபோது, அங்கு சிறுமியின் கையில் பொருத்தப்பட்ட 'கனுலா' உரிய முறையில் பொருத்தப்படாமையால் சிறுமியின் இடது கை மணிக் கட்டுடன் அகற்றப்பட்டது.

கை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக, யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில், யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம், மத்திய சுகாதார அமைச்சு ஆகியனவும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன. இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மாணவி இன்று மீள தனது கற்றல் செயற்பாடுகளைத் தொடர பாடசாலைக்குச் சென்ற வேளை, மாணவியை வரவேற்கும் நிகழ்வு பாட சாலைச் சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (அ-03)

## அவுஸ்திரேலியாவுக்குச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட மேலும் சிலர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைச் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

## புலிப் பயங்கரவாதியே ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியுள்ளார்.

புலிப் பயங்கரவாத அமைப்பின் தலைவர்களில் ஒருவரான திலீபனை நினைவேந்தும் ஊர்தியைத் திருகோணமலையில் சிங்கள மக்கள் தாக்கிச் சேதப்படுத்தியமை நியாயமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

அந்த ஊர்தியில் கஜேந்திரன் எம்.பியும் பயணித்த படியால்தான் அவரும் தாக்குதலுக்கு இலக்கானார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கஜேந்திரன் எம்.பியும் ஒரு புலிப் பயங்கரவாதி எனச் சிங்கள மக்களுக்குத் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலில் வடக்குத் தமிழ் மக்கள் நிராகரித்த கஜேந்திரன், தேசியப்பட்டியல் ஊடாகவே நாடாளுமன்றம் வந்தார் என்றும் விமல் வீரவன்ச எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார். (அ-02)

## கொழும்பில் திலீபன் நினைவேந்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறானதொரு பின்னணியில், இன்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வைக் குழப்பும் வகையில் 'முதுகெலும்பு இருப்பவர்கள் ஆயத்தமாகுங்கள்! கொழும்புக்கு வருகைதரும் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவோம்!!' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதிவுகள் பேஸ்புக், ருவிட்டர் உள்ளிட்ட சமூகவலைத்தளப் பக்கங்களில் அதிகளவில் பகிரப்பட்டன.

அதனையடுத்து, திலீபன் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாகவும், வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் அநாவசியமான குழப்பங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கிலும் இன்று மாலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வை இரத்துச் செய்வதாக கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கம் இன்று காலை அறிவித்தது.

இது இவ்வாறிருக்க, பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவையடுத்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் மருதானை, கோட்டை உள்ளிட்ட மேலும் சில பகுதிகளில் தியாகி திலீபனை நினைவு கூரும் நிகழ்வுகளை நடத்துவதற்குத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்தது. (அ-01)





உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# செந்தில்குமரன் நிவாரண நிதியத்தின் ஊடாக நான்கு குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி

செந்தில்குமரனின் மனிதாபிமானப் பணி எமது மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம், என்று சிறீதரன் எம்.பி. தெரவித்துள்ளார்.

வாழ்வாதார வழிகளற்று, மிகக்கூடிய இடர்பாடுகளுள் வாழ்ந்துவரும் மூன்று சிறுநீரக நோயாளிகள் உள்ளிட்ட நான்கு குடும்பங்களுக்கு, கனடா - செந்தில்குமரன் நிவாரண நிதியத்தின் ஊடாக அண்மையில் நிதியுதவி வழங்கிவைக்கப்பட்டுள்ளது. இவ்வுதவி வழங்கலை மேற்கோள் காட்டியே நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

புலம்பெயர் தேசத்தில் வாழ்கின்ற போதும், எமது மக்களின் நலனோம்புகையில் உயர் கரிசனை கொண்ட செந்தில்குமரன் அவர்களது ஏற்பாட்டில், ஆடி அமாவாசைத் தினத்தன்று, கனடா கந்தசுவாமி ஆலயத்தில், செந்தில்குமரன் நிவாரண நிதியத்தால் சேகரிக்கப்பட்ட நிதி, பொருண்மியம் நலிவுற்ற நிலையிலுள்ள மூன்று சிறுநீரக நோயாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.சுப்பிரமணியம் சிவகுமார் என்பவருக்கு எண்ணெய் ஊற்றும் இயந்திரக் கொள்வனவுக்காக மூன்று இலட்சத்து இருபதாயிரம் ரூபாவும், நாகன் ஸ்ரீபத்மராசா என்பவருக்கு மா அரைக்கும் இயந்திரக் கொள்வனவுக்காக இரண்டு இலட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபாவும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி.தர்சினி இராசரத்தினம் என்பவருக்கு மருத்துவத் தேவை கருதி மூன்று இலட்சத்து அறுபத்தெட்டாயிரம் ரூபாவும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவைதவிர, வட்டக்கச்சி, கிளிநொச்சியைச் சேர்ந்த ஏழு வயதுச் சிறுமியான செல்வி.விஜிதா மோகனதாஸ் அவர்களின் நோய்நிலைமை கருதி அவரது குடும்பத்தினருக்கு, கறவைப் பசுமாடு கொள்வனவு, மாட்டுக் கொட்டகை அமைத்தல் என்பவற்றுக்காக இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகமெங்கும் உள்ள வைத்திய நிபுணர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, சரியான நோயாளி-களை இனம் கண்டு பல கோடி ரூபாய் செலவில் நூற்றுக்கும் மேற்பட்ட இதய சத்திர சிகிச்சைகள், சிறுநீரக நோயாளிகளுக்கான இரத்த சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் வாழ்வாதார உதவித் திட்டங்கள், புற்றுநோய் உள்ளிட்ட சிகிச்சைகளுக்கான மருத்துவ உதவி, வைத்தியசாலைகளின் அடிப்படைக் கட்டுமானங்கள் என எல்லாவகை உதவித்திட்டங்களையும் வழங்கிவைக்கும் செந்தில்குமரன் போன்றோர் எமது மண்ணுக்கும் மக்களுக்கும் கிடைத்திருக்கும் பெரும் கொடை என்றே நான் கருதுகிறேன்.



இந்த அடிப்படையில் நலிந்தோரைத் நாடிச் சென்று, அவர்களது தேவையறிந்து சேவை செய்யும். செந்தில்குமரனின் பணி என்றென்றும் தொடர்வதற்கு, எல்லோரும் இணைந்து அவரது கரங்களைப் பலப்படுத்துவோம், என்றும் சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில், செந்தில்குமரனின் நிதியேற்பாட்டில் புதிதாக அமைக்கப்பட்ட இருதய நோய்ப்பிரிவு அண்மையில் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகரால் திறந்து வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (02)

## அகில இலங்கத் தமிழ்த்தினப் போட்டிகளில் குழு இசைப் பிரிவு 2 இல் யா.இ.க. முதலிடம்



பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கத் தமிழ்த்தினப் போட்டிகளில், குழு இசைப் பிரிவு 2 இல் மாகாணமட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். இவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.

முதலிடம் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் குழுவில் திருவர்த்தனன், லயசர்மா, யாதவன், சிறீராம், நதுக்ஷன், துவாரகன், அக்சயன், விசாகன், லோகயன், இசைவாணன் ஆகிய மாணவர்கள் பங்கேற்றிருந்தனர். இவர்களை ஆசிரியர்களான திருமதி வினித்தா, திருமதி சியாமளா மற்றும் அருளானந்த குமார் ஆகியோர் பயிற்றுவித்திருந்தனர். (04)



## அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் தீர்த்தோற்சவம் சிறப்புற நடைபெற்றது

அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய தீர்த்தோற்சவம் நேற்றைய தினம் திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஒன்று திரண்டு தாமும் தீர்த்தக் கடலில் இறங்கி, இறையருள் பெறப் பிரார்த்தித்திருந்தனர்.

(படங்கள்: வி.ரி. சகாதேவராஜா)




தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
உலக சுற்றுலா தினம்
2023
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
COMMERCIAL BANK
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
The Valampuri
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர் :-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# அமெரிக்கா - ஈரான் நாடுகளுக்கு இடையே கைதிகள் பரிமாற்றம் - ஐவர் விடுதலை

அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ், ஈரான் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட 5 அமெரிக்க கைதிகள் கட்டார் தலைநகர் டோஹாவை திங்கட்கிழமை சென்றடைந்துள்ளனர்.

ஈரானில் அமெரிக்காவுக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த 3 பேர் உள்ளிட்ட 5 அமெரிக்கக் கைதிகள் ஈரானால் விடுதலை செய்யப்பட்டனர்.

அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்பட்ட கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட அவர்கள், கட்டார் தலைநகரை சென்றடைந்தனர். அவர்களை கட்டாருக்கான அமெரிக்க தூதர் டிம்மி டேவிஸ் நேரில் சென்று வரவேற்றார்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், பொருளாதாரத் தடையால் முடக்கப்பட்டிருந்த ஈரானின் 590 கோடி டொலரை அமெரிக்கா விடுவித்துள்ளது. மேலும், தங்கள் நாட்டுச் சிறையிலிருந்து 5 ஈரான் கைதிகளை விடுவிக்கவும் அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஈரான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 5 அப்பாவி அமெரிக்கர்கள் தற்போது விடுதலை அடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் தாயகம் திரும்புகின்றனர்'என்றார். மேலும், ஈரானுக்குச் செல்வதை அமெரிக்கர்கள் தவிர்க்க வேண்டும் என்றும் பைடன் அறிவுறுத்தினார்.

முன்னதாக, ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் நாஸர் கனானி வெளியிட்ட அறிக்கையில், கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ், தென் கொரியாவில் அமெரிக்காவால் முடக்கப்பட்டிருந்த தங்களது 590 கோடி டொலரை அமெரிக்கா விடுவித்த பிறகே அந்த நாட்டின் 5 விடுவிக்கப்படுவார்கள் என்று கூறியிருந்தார்.

மேலும், ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அமெரிக்க சிறையிலிருந்து தங்கள் நாட்டைச் சேர்ந்த 5 கைதிகளை அமெரிக்கா விடுவிக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்த நிலையில், 5 அமெரிக்கக் கைதிகளும் ஈரானிலிருந்து கட்டாருக்கு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, முடக்கப்பட்டிருந்த ஈரானின் 590 கோடி டொலர் விடுவிக்கப்பட்டது உறுதியாகியுள்ளது.

இந்த ஒப்பந்தத்துக்குப் பிறகும் அமெரிக்கா, ஈரான் நாடுகளுக்கு இடையே நிலவி வரும் பதற்றம் தணிவதற்கான வாய்ப்பில்லை என்றே கூறப்படுகிறது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதைத் தடுப்பதற் காக, அந்த நாட்டின் மீது அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தது. இதனால், ஈரானின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இந்த நிலையில், ஈரானுக்கும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜெர்மனிக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் ஏற்பட்டது. அதில், தங்களது அணுசக்தித் திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஈரான் ஒப்புக்கொண்டது. அதற்குப் பதிலாக, ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை விலக்கிக்கொள்ள வல்லரசு நாடுகள் ஒப்புக்கொண்டன.

எனினும், அமெரிக்க அதிபராக ஒபாமா இருந்தபோது ஏற்படுத்தப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக, அவருக்குப் பின் வந்த டொனால்ட் ட்ரம்ப் கடந்த 2019 ஆம் ஆண்டு அறிவித்தார். மேலும், ஒப்பந்தத்தின் கீழ் விலக்கப்பட்டிருந்த ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அவர் மீண்டும் அமல்படுத்தினார்.



அதற்குப் பதிலடியாக, தாங்கள் அணு ஆயுதம் தயாரிக்கப்போவதில்லை என்பதை உறுதி செய்யும் வகையில் நிறைவேற்ற ஒப்புக்கொண்ட நிபந்தனைகளை ஈரான் படிப்படியாக மீறி வருகிறது. இது அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையிலான பதற்றத்தை அதிகரித்து வருகிறது.

இந்தச் சூழலில், இரு நாடுகளுக்கும் இடையே கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்கா விடுவித்திருக்கும் 590 கோடி டொலர், அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறிய பிறகு ஈரான் மீது ட்ரம்ப் விதித்த பொருளாதாரத் தடையின் கீழ், தென் கொரியாவில் முடக்கப்பட்ட ஈரான் பணமாகும். அந்தத் தடைக்கு முன்னதாக ஈரானிடமிருந்து தென் கொரியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்திருந்தது. அதற்காக ஈரானுக்குச் செலுத்தவேண்டிய 590 கோடி டொலர், பொருளாதாரத் தடையின் காரணமாக முடக்கிவைக்கப்பட்டிருந்தது. (04)



# தென்னாபிரிக்கச் சாலை விபத்தில் 20 பேர் பலி - பேருந்து எரிந்து நாசம்


தென்னாபிரிக்காவில் பாரவூர்தியுடன் பேருந்து மோதி ஏற்பட்ட விபத்தில் கட்டுமானப் பணியாளர்கள் உள்பட 20 பேர் பலியாகினர்.

சிம்பாப்வே எல்லையையொட்டி அமைந்துள்ள முஸினா நகரச் சுரங்கத்தை நோக்கிக் கட்டுமானப் பணியாளர்களுடன் சென்று கொண்டிருந்த பேருந்து, லிம்போபோ மாகாணத்தில் எதிரே வந்த பாரவூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில், 17 பணியாளர்கள் உள்பட 20 பேர் பலியாகினர். 4 பணியாளர்கள் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் பேருந்து முழுவதும் எரிந்து நாசமானது, என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தென்னாபிரிக்காவில் மோசமான நிலையிலுள்ள பாரவூர்திகள் உரிய அனுமதியின்றி இயக்கப்படுவதாகவும், இந்த விபத்துக்கு இதுவே காரணம் என்றும் கூறப்படுகிறது. (04)

# 24 மணி நேரத்தில் 103 போர் விமானங்களை சீனா அனுப்பியது! – தாய்வான் குற்றச்சாட்டு



24 மணி நேரத்தில் தங்கள் தீவை நோக்கி 103 போர் விமானங்களை சீனா பறக்கச் செய்ததாக தாய்வான் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து தைவான் பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தாய்வானை நோக்கி சீன விமானங்கள் அத்துமீறிப் பறக்க விடப்படுகின்றன. ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6 மணியிலிருந்து, திங்கட்கிழமை அதிகாலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் மட்டும் தாய்வானை நோக்கிப் பறந்து வந்த சீன விமானங்களின் எண்ணிக்கை 103 ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன உள்நாட்டுப் போருக்குப் பிறகு, தாய்வான் தனி நாடாகச் செயல்பட்டு வருகிறது. எனினும், அந்தத் தீவை தங்கள் நாட்டின் ஓர் அங்கமாகச் சீனா கருதி வருகிறது.

தாய்வானைத் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் இணைத்துக் கொள்ளலாம் என்றும், அதற்குத் தேவைப்பட்டால் ராணுவ பலத்தைப் பயன்படுத்தவும் தயங்கப்போவதில்லை என்றும் சீன அதிபர் ஷி ஜின்பிங் கூறி வருகிறார்.

தாய்வானைத் தனி நாடாக அங்கீகரிப்பதைப் போன்ற செயற்பாடுகளாக, அந்தத் தீவுக்கு முக்கிய தலைவர் சென்றாலோ, தாய்வான் தலைவர்கள் அரசு முறைப் பயணம் வர பிற நாடுகள் அனுமதித்தாலோ அதற்குச் சீனா கடும் கண்டனம் தெரிவித்து வருகிறது.

இந்தச் சூழலில், 24 மணி நேரத்தில் தைவானை நோக்கி 103 சீன போர் விமானங்கள் தற்போது பறக்கவிடப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (04)

# இந்தியாவைவிட்டு வெளியேற கனடா தூதருக்கு உத்தரவு

இந்தியாவைவிட்டு வெளியேறுமாறு கனடாவின் தூதரக அதிகாரிக்கு இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இன்று உத்தரவிட்டுள்ளது.

கனடாவில் வசிக்கும் அந்த நாட்டுக் குடியுரிமை பெற்ற காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் கொலை செய்யப்பட்டார். இந்த விவகாரத்தில் இந்தியாவுக்குத் தொடர்பு உள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்தி வருவதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு இந்திய வெளியுறவுத் துறை கடும் கண்டனம் தெரிவித்திருந்த நிலையில், இந்திய தூதரக உயர் அதிகாரியை கனடாவைவிட்டு வெளியேறுமாறு அந்த நாட்டு அரசு திங்கட்கிழமை அறிவித்திருந்தது.

இந்த நிலையில், இந்தியாவுக்கான கனடா தூதரக உயர் அதிகாரி கமரூன் மக்கேவை நேரில் ஆஜராகுமாறு இந்திய மத்திய வெளியுறவுத் துறை சம்மன் வழங்கியிருந்தது. இதனைத் தொடர்ந்து, டில்லியில் உள்ள வெளியுறவு அமைச்சக அலுவலகத்தில் இன்று காலை ஆஜரான கமரூனை 5 நாள்களுக்குள் இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டும் என இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

தூதரக அதிகாரிகள் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டுள்ளதாக தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (04)



# காரைதீவு பேராசிரியர் பாலசுந்தரம் சிறப்பு பாராட்டு விழா கனடாவில்!







(வி.ரி.சகாதேவராஜா)

கனடா சுவாமி விபுலானந்தர் கலை மன்றம், கனடாவில் வாழும் காரைதீவைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் இளைய தம்பி பாலசுந்தரம் அவர்களுக்கு பெரும் பாராட்டு விழா ஒன்றை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடாத்தியது.

கனடா ஒன்றாரியோ தமிழ் இசைக்கலா மன்றத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வை, கனடா சுவாமி விபுலானந்தர் கலை மன்றத்துடன் அண்ணாமலை பல்கலைக்கழக கனடா வளாகம், கனடா கவிஞர் கழகம், கனடா தொல்காப்பியர் மன்றம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

கனடா சுவாமி விபுலானந்தர் கலை மன்ற தலைவர் எல். புருசோத்தமன் தலைமையில், விழாக்குழுத் தலைவர், எழுத்தாளர், கல்வியியலாளர் க. குமரகுரு ஒருங்கிணைப்பில் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

கனடாவில் வாழும் காரைதீவைச் சேர்ந்த பிரபல சமூக செயற்பாட்டாளர் வைத்திய கலாநிதி டொக்டர் அ.வரதராசன் வரவேற்றார். பேராசிரியர் முனைவர் இளையதம்பி பாலசுந்தரம், மனைவி விமலா பாலசுந்தரம், அவர்களின் ஏக புத்திரன் கலாநிதி இளமாறன், பேரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

பேராசிரியருக்கு "செந்தமிழ் பேரொளி" என்ற சிறப்பு பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, அதே பெயரில் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

மன்ற செயலாளர் நித்திசிவானந்தராஜா பொருளாளர் எஸ். உதயகுமாரன், பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என பல தரப்பட்ட பிரமுகர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் முனைவர் இளையதம்பி பாலசுந்தரம் கல்வியியலாளராகவும், துணிந்த எழுத்தாளராகவும், ஆழ்ந்த ஆய்வாளராகவும், தமிழ் இலக்கியம், மொழியியல், பண்பாடு, இந்து சமயம், சமூகம் போன்ற துறைகளில் கடந்த 50 ஆண்டுகளாக அயராது உழைத்து, செயல் திறன்கள் செய்த அறிஞர். இவர் இதுவரை 22 நூல்களை வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர் முனைவர் இளையதம்பி பாலசுந்தரம், மதுரை உலகத் தமிழ்ச் சங்க இலக்கிய விருதுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவத்தின் பாற்குட பவனி



காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவத்தின் பாற்குடபவனி நேற்று, திங்கட்கிழமை நடைபெற்றது. காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி பாலையடி வால விக்னேஸ்வர ஆலயத்தை நோக்கி பாற்குடங்களை ஏந்தியவாறு பக்தர்கள் வரிசையாக வந்திருந்தனர்.

(படங்கள். வி.ரி. சகாதேவராஜா)






## கல்முனை சமாதான பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனையில் சுமார் 31 வருடங்களாக இயங்கி வருகின்ற சமாதான பாலர் பாடசாலையினால் நேற்று முன்தினம் சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சி ஒன்று சமாதான பாலர் பாடசாலையின் பணிப்பாளர் எம்.எச். ஹிஜ்ரா தலைமையில் அல்-பஹ்றியா தேசியப் பாடசாலை மைதானத்தில் ஏற்படாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் பிரதிமுதல்வரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் கலந்துகொண்டார்.

கல்முனை அல்- பஹ்றியா தேசிய பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைசல், பிரதி அதிபர் ஈ. றினோஸ் ஹஜ்மீர், விளையாட்டு ஆசிரியர் எம்.எம்.றியால், அல்-பஹ்றியா பழைய மாணவிகள் அமைப்பின் செயலாளரும் ஆசிரியையுமான எம்.எம்.நஜீனா லாபீர், நைட்டா போதனாசிரியர் பொறுப்பாளர் திரு. எம்ரீ. அஸ்கர் ஆகியோரும் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

போட்டி நிகழ்ச்சிகளில் பங்கேற்ற சிறார்களுக்குப் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

மேலும், ரஹ்மத் பவுண்டேஷன் மூலம் போட்டியில் கலந்துகொண்ட அனைத்துச் சிறார்களுக்குமான பாடசாலை உபகரணங்கள் ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகர் ரஹ்மத் மன்சூர் அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், குறித்த சிறுவர்களின் பெற்றோர்கள், ஊர்மக்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ஒருவருக்கு நினைவேந்தல் ஊர்வலத்தை நடத்த முடியுமா?

## ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ.கலிலூர் ரஹ்மான் கேள்வி எழுப்புகிறார்



(நூருல் ஹுதா உமர்)

விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திலீபனின் நினைவாக கிழக்கிலிருந்து வடக்கு நோக்கிச் சென்ற நினைவேந்தல் ஊர்வலத்தின் போது, ஊர்வல வாகனத் தொடரின் மீது திருகோணமலையில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதுடன் அதனுடன் பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் நடைபெற்றது சரியா, பிழையா? என்ற விவாதத்தை ஒருபுறம் வைத்து விட்டு, பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ஒருவரின் சார்பில் நினைவேந்தல் ஊர்வலம் நடத்த முடியுமா? என்ற கேள்வி எழுவதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் ஊர்வலம் நடத்தப்பட்டமை பல்வேறு கேள்விகளை மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளதாக ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினரும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்கள் வாழும் பிரதேசத்தின் ஊடாக இவ்வாறான ஊர்வலம் நடத்துவது மோதலை உருவாக்கும் சதியா? என்பதைக் கண்டறிய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தச் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் தங்கம் கொண்டு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது போன்று, பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர் ஒருவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் முன்னின்று நினைவேந்தல் ஊர்வலம் நடத்தி உள்ளமை தொடர்பில் இலங்கை நாடாளுமன்றமும், சபாநாயகரும் பக்கச்சார்பின்றிய விசாரணையை நடத்த முன்வர வேண்டும். விடுதலைப் புலிகளின் திலீபனைப் பற்றிப் பேசும் போலி முற்போக்குக் கருத்தாளர்கள் எனப்படுபவர்கள், அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டு தொடர் உண்ணா விரதப் போராட்டத்தில்தான் திலீபன் உயிர் இழந்தார். அவர் தியாகி என்கிறார்கள்.

அவர்கள் திலீபன் மிருகத்தனமான இரத்தவெறி கொண்ட பாசிச புலி அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தினார் என்ற கசப்பான உண்மையை வெளிப்படுத்த முன்வருவதில்லை. எனவே, ஜனநாயக நீரோட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு தலைவரும், பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர்களை நினைவுகூர்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதாவது, ஜனநாயகத்தை நிராகரித்து ஆயுதம் ஏந்தியவர்கள் ஜனநாயக விரோதமாகக் கருதப்படுவார்கள், எனவே ஜனநாயகத்தை விரும்பும் அரசியல் மற்றும் சிவில் தலைவர்கள் மக்களைக் கொண்டாட வேண்டுமே தவிர பயங்கரவாத அமைப்பின் பயங்கரவாதிகளைக் கொண்டாடக் கூடாது.

இப்படி ஜனநாயக முறையில் போராடிய தலைவர்களை இப்போதைய அரசியல் தலைவர்கள் கொண்டாடினால் விடுதலைப் புலிகள் போன்ற பயங்கரவாத அமைப்பு கொடூரமானது என்பதை மக்கள் உணர்ந்து, பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட ஜனநாயகத் தலைவர்களை மாவீரர்களாக மதிப்பார்கள், என்று தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு இராணுவ அபிலாசைகள் எதுவும் இல்லை வல்லரசுகளுக்கு ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டினார்




வல்லரசு நாடுகளுக்கிடையிலான அதிகாரச் சண்டைகளில் ஈடுபடுவதற்கு இலங்கை விரும்பவில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற கடல்சார் நாடுகளுக்கான ஆசிய-பசுபிக் தீவு நாடுகளின் கலந்துரையாடலில் பங்கேற்று சிறப்புரை ஆற்றுகையிலே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியப் பெருங்கடலில் தமது செல்வாக்கினை நிலைநிறுத்துவதற்கு வல்லரசு நாடுகள் முயற்சித்து வரும் நிலையில், இலங்கைக்கு இராணுவ அபிலாசைகள் எதுவும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், குறித்த இராணுவச் செயற்பாடுகளுக்குப் பக்கபலமாக இருப்பதற்கும் இலங்கை விரும்பவில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும், இந்து சமுத்திரத்தில் இடம்பெறும் எந்தவொரு இராணுவ ஒத்திகைக்கும் இலங்கை ஆதரவளிக்காது எனவும், இந்தியப் பெருங்கடலில் உள்ள நாடுகள் மற்றும் பசுபிக் பகுதிகளில் உள்ள பல நாடுகள், நல்வாழ்வு மற்றும் அபிவிருத்தி இலக்குகளை சமரசம் செய்யும் சக்திகளுக்கு இடையிலான போர்களில் உள்ளீர்க்கப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, இந்தியப் பெருங்கடல் ரிம் சங்கத்தின் (IORA) தலைமைத்துவத்தை முன்னிலைப்படுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாரியளவிலான பிராந்திய செல்வாக்கிற்காக சங்கத்தின் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தியுள்ளார். (க)




# சாய்ந்தமருது பிரதேச கடலரிப்பை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கடந்த சில வாரங்களாக அகோரமாக கடலரிப்பைச் சந்தித்துள்ள சாய்ந்தமருது பிரதேசத்தின் மீனவ வாடிகள், பள்ளிவாசல், பூங்காக்கள் என்பன கடலரிப்பில் வெகுவாகச் சேதமடைந்துள்ளதோடு, மீன்பிடி நடவடிக்கையும் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் உயர் மட்டப் பிரமுகர்கள், அதிகாரிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று மாலை சாய்ந்தமருது அல் - ஹசனாத் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

அதிக மீன் உற்பத்தியைக் கொண்ட இந்தப் பிரதேச மீனவர்களின் பிரச்சினைகளை கள விஜயம் மேற்கொண்டு கேட்டறிந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், கடலரிப்பை கட்டுப்படுத்த மேலதிக நடவடிக்கை எடுக்கும் வகையில் சாய்ந்தமருது பிரதேச செயலாளருக்கு முன்வைத்த பணிப்புரைக்கு அமைவாக இந்தக் கலந்துரையாடல் ஒருங்கமைக்கப்பட்டு நடைபெற்றது.

இதில், கரையோரம் பேணல் திணைக்கள கிழக்கு மாகாணப் பொறியியலாளர் எம். துளசிதாசன் கலந்து கொண்டு தமது திணைக்களம் இவ்விடயம் தொடர்பாக இதுவரை முன்னெடுத்துள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பிலும், எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டியவை தொடர்பாகவும் சபைக்கு விளக்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கலாநிதி ஏ.எம். ஜமீல், சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். சலீம், ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என்.ஹுதா உமர், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எச். நிஷார்தீன், கரையோரம் பேணல் திணைக்கள சாய்ந்தமருது பிரதேச அதிகாரிகள், சாய்ந்தமருது பிரதேச செயலக அதிகாரிகள், சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி அமைப்பின் நிர்வாகிகள், கிழக்கு மாகாண ஊழியர்கள், மீனவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலின்போது துரிதகதியில் இப்பணியை முன்னெடுக்கத் தேவையான விடயங்கள் தொடர்பாகச் சபையோரால் ஆழமாக ஆராயப்பட்டது. இப்பணியை முன்னெடுக்கத் தேவையான நிதியைப் பெறுவது தொடர்பிலும், திட்டவரைபை வரைவது தொடர்பிலும் கலந்துரையாடி நிலையான தீர்மானங்களை எடுக்க தேவையான நடவடிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அரச உயர் மட்டங்களைத் தொடர்பு கொண்டு எடுத்தார்.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு குழுவாக இணைந்து செயற்பட்டு, தீர்வைக் காண இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பிலான அரச உயர்மட்டச் சந்திப்பொன்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸின் ஏற்பாட்டில் எதிர்வரும் புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாந்தோட்டை வர்த்தகத் துறைமுகத்தை இராணுவத் தளமாக முத்திரை குத்தாதீர்கள்!

## சீனாவிடம் ரணில் வேண்டுகோள்




இந்து - பசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசுப் போட்டி நிலவிய போதிலும், இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக் சமுத்திர தீவு நாடுகளின் சுதந்திரம், அவற்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை மற்றும் அவர்களின் தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக நியூயோர்க் நகரில் நேற்று நடைபெற்ற கடல்சார் நாடுகளுக்கான 3 ஆவது இந்து - பசுபிக் தீவு நாடுகளுக்கு இடையிலான பேச்சில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

கார்னகி எண்டோவ்மென்ட் மற்றும் சசகாவா மன்றம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதான உரை நிகழ்த்தியதோடு, சர்வதேச அமைதிக்கான கார்னகி எண்டோவ்மென்ட் இன் கொள்கை ஆராய்ச்சி தொடர்பான சிரேஷ்ட உப தலைவர் டென் பெயரினால் இது நெறிப்படுத்தப்பட்டது.

பிரதான உலக வல்லரசுகளுக்கு இடையிலான போட்டியில் தலையிடுவதற்கு, இந்து சமுத்திர மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகள் விரும்பவில்லை என்றும், இந்த நாடுகள் தமது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு உட்பட அவர்களின் முதன்மையான விடயங்களில் கவனம் செலுத்தி, தமது நாடுகளின் இறைமை மற்றும் சுதந்திரத்தைப் பேண முயற்சிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மேலும், இலங்கை அரசு இந்தியாவுடனோ அல்லது சீனாவுடனோ கூட்டணி அமைக்காது என்றும், எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் நலன்களை முன்னிலைப்படுத்தி நிற்கும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதேபோன்று, பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளும் தமது நாடுகளின் இறைமைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா உள்ளடக்கிய க்வொட் நாடுகள் மற்றும், சீனாவின் இலக்குகளுடன் தொடர்பில்லாத இந்து சமுத்திரத்தின் மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகள் தமது சொந்த முன்னுரிமைகளைக் கொண்டிருப்பதாகவும், அவற்றை மதிக்கத் தயாராக இருக்கும் எந்தவொரு தரப்பினருடனும் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்ப இலங்கையும் செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சீனாவின் எழுச்சியானது பிராந்திய கட்டமைப்புக்குள்ளேயே நடந்தது எனவும், அதனைப் பல நாடுகள் ஏற்றுக்கொள்வதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

அண்மைக்காலமாக இந்தக் கட்டமைப்புக்கு அப்பால் மாபெரும் வல்லரசுப் போட்டி விரிவடைந்து வருவதால் உறுப்பு நாடுகள் மத்தியில் கவலை தோன்றியுள்ளது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தெற்கு பசுபிக் சமுத்திரம் மற்றும் இந்து சமுத்திரம் ஆகியவை, பெரும் மூலோபாய மதிப்பைக் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தெற்கு பசுபிக் பிராந்தியம் அமெரிக்க கடற்படைக்கு இன்றியமையாத கேந்திர மையமாகும் என்றும், இரண்டாம் உலகப் போர் காலத்தின் போது இந்து சமுத்திரம் முக்கிய பங்காற்றியது என்றும் தெரிவித்தார்.

பவளக் கடல் மற்றும் மிட்வே போரின் போதும் இரண்டாம் உலகப் போரின் போதும் அமெரிக்கா தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தியதும் மற்றும் அட்மிரல் யமமோட்டோவின் விமானத்தை சுட்டு வீழ்த்தியதும் ஹவாய் உட்பட இந்த தென் பசுபிக் பிராந்தியத்தில் தான் என்பதை ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் முக்கியத்துவத்தை இதன்போது விளக்குவதற்காக, வின்ஸ்டன் சர்ச்சிலின் அறிக்கையை மேற்கோள் காட்டிய ஜனாதிபதி, "இலங்கையை கைப்பற்றுவது என்பது இந்து சமுத்திரத்தில் அதிகாரத்தை இழப்பதாகும்" என்றும் குறிப்பிட்டார்.

இந்து - பசுபிக் பிராந்தியத்தின் முக்கியத்துவம், குறிப்பாக சீனாவின் சவால்களால் எடுத்துக்காட்டப்படுவதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இது பிராந்திய இயக்கம் மற்றும் ஒத்துழைப்பை மீள் மதிப்பீடு செய்ய தூண்டியுள்ளது என்றும் தெரிவித்தார்.

ஐரோப்பிய சக்திகள் மற்றும் நேட்டோவை தொடர்புபடுத்துவதற்காக ஜி - 7 குழு எடுக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு எழுந்ததுடன், பிரான்ஸ் மட்டுமே அதற்கு ஆதரவளித்தது என்றும், இந்த சம்பவம் இந்து சமுத்திர ரிம் சங்கத்தின் விதிகளை மீறுவதாகக் கருதப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்து சமுத்திரத்தின் மேற்பரப்புப் போர் அச்சுறுத்தல்களைக் குறைக்கும் வகையில் நீர்மூழ்கிக் கப்பல் போர் அச்சுறுத்தல்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு இந்து சமுத்திர ரிம் சங்கத்திற்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

தீவு நாடுகள் தொடர்பிலான பாதுகாப்பு உரையாடல்களை ஏற்றுக்கொள்ள முடியும் என்றாலும், அந்த நாடுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவது பொருத்தமானதல்ல எனவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை உட்பட பல தீவு நாடுகள் இந்து - பசுபிக் பிராந்தியம் தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடல்களில் ஈடுபடவில்லை என குறிப்பிட்ட ஜனாதிபதி, அமெரிக்கா மாலைதீவில் தூதரகமொன்றைத் திறப்பது போன்ற அண்மைக் கால முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இங்கு, அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அம்பாந்தோட்டை வர்த்தகத் துறைமுகத்தை சீனா இராணுவத் தளமாக முத்திரை குத்துவது தொடர்பில் இலங்கை கவலையடைவதாகத் தெரிவித்தார்.

இந்தியாவுடன் இணைந்து திருகோணமலைத் துறைமுகத்தை இலங்கை அபிவிருத்தி செய்து வருவதாகவும், சர்வதேச அரங்கில் இந்த விடயத்தை முன்வைக்க விரும்புவதாகவும் ஜனாதிபதி கூறினார்.

இந்திய மற்றும் பசுபிக் சமுத்திரங்களுக்கு இடையேயான தொடர்பை இனங்கண்டு, இரு பிராந்தியங்களின் சிறிய தீவு நாடுகளுக்கிடையில் செயலூக்கமான ஒத்துழைப்பை வலியுறுத்திய ஜனாதிபதி, 'இந்து - பசுபிக்' கருத்தியலுக்கு இந்து சமுத்திர ரிம் சங்கத்தின் தேவை அதிகளவில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்து - பசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசுப் போட்டி நிலவிய போதிலும், இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகளின் சுதந்திரம், அவற்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை, அவர்களின் தனிப்பட்ட முன்னுரிமைகளின் பாதுகாப்பதற்காக பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார். (அ-04)

# வங்குரோத்து அடைந்த நாட்டை கட்டியெழுப்ப சந்தர்ப்பம் கோருகிறது தேசிய மக்கள் சக்தி!




சுகாதாரம்,கல்வி,பொருளாதாரம் என அனைத்து துறைகளும் வீழ்ச்சியடைந்து இலங்கை வங்குரோத்து அடைந்து ஆபத்தான நிலைமையில் இருப்பதாக தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கான இறுதி சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அந்த சந்தர்ப்பத்தை தேசிய மக்கள் சக்திக்கு வழங்குமாறு கோரிக்கை விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வங்குரோத்து அடைந்து ஆபத்தான நிலைமையில் இருக்கும் நாட்டை தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் காப்பாற்றி ஆரோக்கியமான, சுபீட்சமான நிலைமைக்கு கொண்டு வர தாம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

75 ஆண்டுகளாக வேறு ஆட்சியாளர்களிடம் ஆட்சி அதிகாரத்தை வழங்கிய நாட்டை ஐந்து ஆண்டுகளுக்கு தேசிய மக்கள் சக்தியிடம் வழங்குங்கள் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐந்தாண்டுகளுக்கு பின்னர் தாங்கள் சிறப்பாக ஆட்சி செய்திருந்தால், மீண்டும் ஆட்சி அதிகாரத்தை வழங்குங்கள் இல்லையென்றால், விரட்டியடியுங்கள் எனவும் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார். (க)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தை நாடுகின்றது சஜித் அணி!

திருத்தம் செய்யப்பட்டு மீள நாடாளுமன்றில் முன்வைக்கப்படவுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, உயர் நீதிமன்றத்தை நாடவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சட்டமூலத்தில் எவ்வாறான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டாலும், அதற்குத் தமது தரப்பு எதிர்ப்பை வெளியிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார். (அ-05)

# பாடசாலை மாணவி வன்புணர்வு மேலதிக வகுப்பு ஆசிரியர் கைது

பாடசாலை மாணவியொருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 44 வயதுடைய கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வத்தேகம பகுதியில் அமையப்பெற்றுள்ள தனியார் வகுப்பறையில் நீண்ட நாட்களாக குறித்த மாணவியை ஆசிரியர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி வந்துள்ளமை தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-06)

# மஞ்சள் காமாலை நோய்க்கான 2,000 தடுப்பூசிகள் இலங்கைக்கு

மஞ்சள் காமாலை நோய்க்கான 2,000 தடுப்பூசிகள் அடுத்த வாரம் நாட்டுக்கு கிடைக்கப்பெறும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரான விசேட வைத்தியர் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

மஞ்சள் காமாலை நோய்க்கான தடுப்பூசிகளின் தட்டுப்பாடு காரணமாக, கடந்த காலத்தில் சுகாதார அமைச்சு மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே, யுனிசெப் அமைப்பின் உதவியுடன், விரைவில் குறித்த தடுப்பூசிகள் நாட்டிற்கு கிடைக்கப்பெறும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் விஜேசூரிய குறிப்பிட்டுள்ளார். (க)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2023இல் வெளியிடப்பெற்றது.